1986 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. த. இராமசாமி: இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. தகவல் கோரல்.

மின் வாரியத் தலைவர் பற்றி நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்கள் மீது முறையீடு.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a point of order. நேற்று நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே ஒரு கருத்தைச்சொன்னார்கள். நம்முடைய மின் வாரியத் தலைவர் பற்றிய ஸ்ட்ரிக்ச்சர் அடங்கிய நீதிமன்றத் தீர்ப்பு சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் அட்மிட் ஆகிவிட்டது. ஆகவே, அதுபற்றி பேசுவது சப்-ஜுடிஸ் என்று சொன்னார்கள். ஆனால் எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்கள்படி அது சரியல்ல. ஏனென்றால் Misleading the House என்று ஆகிவிடக் கூடாது. உண்மையான தகவல் தெரிய வேண்டும்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை என்னிடம் கொடுங்கள்.

Thiru A. RAHMANKHAN : He is misleading the House...

MR. SPEAKER : Are you sure?

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, leave for Appeal, number ஆகியிருக்கிறது. Writ Petition admit ஆகவில்லை. நாளைக்குத் தான் அட்மிட் பண்ணலாமா, பண்ணக்கூடாதா என்று இருப்பதாக பரவலாக வழக்கறிஞர்கள் மூலம் நான் கேள்விப்படுகிறேன். எனவே இது சப்-ஜுடிசா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : If leave petition is numbered, it is sub-judice.

Thiru A. RAHMANKHAN : The appeal is not pending.

MR. SPEAKER : The Special Leave petition is numbered (interruptions).

உட்காருங்கள் சொல்கிறேன். சுப்ரீம் கோர்ட்டில் Leave to Appeal தான் முதலில் பைல் பண்ண முடியும். லீவ் டு அப்பீல் நம்பராகி விட்டால் அது சப்-ஜூடிஸ், Without filing a Leave Petition, you cannot file an appeal.

THIRU A. RAHMANKHAN : The case is not admitted. It is not sub-Judice.

MR. SPEAKER : Ofcourse, it is not admitted. But Special Leave Petition is numbered. It is posted before the Court. It is coming up tomorrow. So, it is sub-judice. (Interruptions) You said it is coming up tomorrow.

THIRU A. RAHMANKHAN : Whether it is admitted or not, is the point.

MR. SPEAKER : That will be known only tomorrow.

THIRU A. RAHMANKHAN : it is not admitted. But the Hon. Minister said on the floor of the House that already an appeal has been admitted.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, நான் நேற்றைய தினம் கவனமாக Special Leave admit ஆனதும், அதனுடைய நம்பரையும் தான் சொன்னேனே தவிர, Appeal pending ஆக இருக்கிறதென்று சொல்லவில்லை.

MR. SPEAKER : If there is a case or possibility of a case coming up later on, a Member should not refer to the matter. I will tell again. If there is a case or possibilisy of a case coming up later on, a member should not refer to the matter. In this case, it is numbered, so the 'possibility' is certain.

9. தமிழ்நாடு மின்வாரிய நிதிநிலை அறிக்கை 1986-87 மற்றும் துணை நிதி நிலை அறிக்கை 1985-86 ஆகியவைமீது விவாதம்—தொடர்ச்சி.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, மின் சார வாரியத்தினுடைய 1986—87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை யின் மீதான விவாதத்தில் பங்கு கொள்வதற்கு வாய்ப்பளித்த தற்கு நன்றி. நம்முடைய முன்னோர்கள் கண்டுபிடித்ததெல் லாம் பஞ்ச பூதங்கள். ஆனால் பகுத்தறிவு படைத்த மனிதன் கண்டுபிடித்தது ஆறாவது பூதம். அது தான் மின்சாரம். இறை வன் பஞ்ச பூதங்களை வைத்து மனிதனை உருவாக்கினான், உலகத்தை உருவாக்கினான் என்று சொல்வார்கள். ஆனால் மனிதனைக் கூட உருவாக்குகிற அளவிற்கு இந்த மின்சாரம் வளர்ந்து விட்டிருக்கிறது.